# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் இலங்கை பொலிசாருக்கு 134 "சிங்கிள் கெப்" ரக வாகனங்கள் கையளிப்பு

இந்திய அரசாங்கத்தின் 300 மில்லியன் இலங்கை ரூபா நன்கொடை உதவி திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 134 "சிங்கிள் கெப்" ரக வாகனங்கள் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களது பிரசன்னத்துடன் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் கையளிக்கப்பட்டது.

2. போக்குவரத்து வசதிகளை வலுவாக்கல், செயற்திறனை அதிகரித்தல் மற்றும் குறிப்பாக சவால்மிக்க பகுதிகளில் பதிலளிக்கும் செயற்பாடுகளுக்கான நேர விரயத்தை குறைத்தல் ஆகியவற்றை இலக்காக கொண்டு இவ்வாகனங்கள் கையளிக்கப்பட்டிருக்கும் நிலையில், இலங்கை பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் சௌகரியம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக சட்ட ஆட்சியை வலுவாக்குவதனை ஒட்டுமொத்த இலக்காக கொண்டுள்ளது.

3. குறித்த வாகனங்களை வழங்குவதற்க்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை பொலிசாரின் கோரிக்கைக்கு அமைவாக 2025 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டது. 2024 டிசம்பரில் ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயல் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த விஜயத்தின் போது அவரும் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களும் இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதில் இந்திய அபிவிருத்தி உதவியின் மூலமான நிலைமாற்ற தாக்கங்கள் தொடர்பாக ஏற்றுக்கொண்டிருந்தனர். பல்வேறு துறைகளிலும் மக்களை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பங்குடைமையை தீவிரப்படுத்துவதற்கும் அவர்கள் இணங்கியிருந்தனர்.

4. ஸ்ரீலங்கா பொலிஸ் பயன்பாட்டிற்காக குறித்த வாகனங்களை வழங்குவதற்கான முன்மொழிவானது, 2025 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தில் மாண்புமிகு ஜனாதிபதி திசாநாயக்க அவர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட வீதிப் பாதுகாப்பு, ஆபத்தில் உள்ள மக்களுக்கு உரிய நேரத்தில் உதவுதல் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் ஆகிய நோக்கங்களுடன் ஒத்துப்போனதுடன், அவற்றிலிருந்து உத்வேகத்தையும் பெற்றது.

5. குறித்த வாகனங்களை கையளிக்கும் நிகழ்வு இன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அதேவேளை, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கௌரவ

ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் கௌரவ சுனில் வட்டகல, அமைச்சின் செயலாளர் திரு D.W.R.B.செனவிரத்ன, பொலிஸ் மா அதிபர் திரு பிரியந்த வீரசூரிய, பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் இலங்கை பொலிஸ் அதிகாரிகள், ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

6. உட்கட்டமைப்பு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி, சமூக அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து முக்கிய துறைகளிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பன்முக அபிவிருத்தி பங்குடைமையில், இந்த வாகனங்கள் கையளிப்பு மற்றுமொரு முக்கிய அத்தியாயத்தைக் குறித்துநிற்கின்றது.

*********************

**கொழும்பு**
**25 மே 2026**